DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 131/2023 Crime No. 134/2021 Station Kelamangalam PS

| | | | |
|---|---|---|---|
| Name | Lw12 /Pw 6/ Madesh | Village | |
| Father Name | Nagaraj | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**24.10.2025.**

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர் . 7 மற்றும் 8 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா.6 முதல் விசாரணை**

நான் கெலமங்கலத்தில் குடியிருந்து கம்பெனி வேலை செய்து வருகிறேன். 14.10.2021 ம் தேதி அன்று கெலமங்கலம் காவல் நிலையத்தில் இருந்து போன் செய்து என்னை அழைத்து திருட்டு கேஸ் ஒன்று பிடித்திருப்பதாகவும் அதற்கு கையெழுத்து செய்யவேண்டும் என்று கூப்பிட்டார்கள். நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். 2 பேரை பிடித்து வைத்திருந்தார்கள். அவர்கள் பெயர் தெரியாது. அவர்களை உட்கார வைத்திருந்தார்கள். டைப் செய்திருந்த பேப்பரில் கையெழுத்து போடும் படி சென்னார்கள். நான் கையெழுத்து போட்டு வந்துவிட்டேன். 7 வது எதிரி பிரேம் குமார் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து மட்டும் என்னுடையது ஆகும். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.12** ஆகும். ராகேஷ் (எ) அன்சர்பாஷா என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து மட்டும் என்னுடையது ஆகும். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.13** ஆகும். 7 வது எதிரியின் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து மட்டும் என்னுடையது ஆகும். அந்த கையெழுத்து மட்டும் **அ.தச.சா.ஆ.14** ஆகும். ராகேஷ் (எ) அன்சர்பாஷா என்பவரின் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 சாட்சி கையெழுதது மட்டும் என்னுடையது ஆகும். அந்த சாட்சி கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.15** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதிஅரசு தரப்பில் குறுக்கு விசாரணை, செய்ய அனுமதி கோரி வழ்ங்கப்பட்டதன் அடிப்படையில் குறுக்கு விசாரணை.**

கடந்த 16.10.2021 ம் தேதி நானும் மஞ்சுநாத் என்பவரும் ஓசூர் டு அகொண்டப்பள்ளி பஸ்டாப் அருகே சென்றுகொண்டிருந்தோம் என்றால் சரிதான். அப்போது பஸ்டாப் அருகில் இராயக்கோட்டை காவல் ஆய்வாளர் 2 நபர்களை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார் என்றால் இல்லை. அவர்கள் இரண்டு பேரும் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் இல்லை. எங்கள் முன்னிலையில் தான் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை. அதற்கு பிறகு அன்சர்பாஷா வீடான அத்திப்பள்ளி க்கு சென்று அங்கு தங்க கழுத்து செயின், பிரேஸ்லட், மோதிரம் கைப்பற்றப்பட்டது என்றால் இல்லை.

என்முன்னிலையில் தான் கைப்பற்றப்பட்டது என்றும், நான் கைப்பற்றுதல் மகஜரில் கையெழுத்து செய்திருக்கிறேன் என்றும் தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 5, 7, 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1 முதல் 5, 7, 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்படுகிறது.**

ஒம்./– எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.